**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts05sp052026.14
https://ngmtamil.in/

# Social Thoughts in Na. Muthukumar's Songs

**A.Kesavan**[1*], **Dr.S.Vaitheeswaran**[2],

[1]Reg.no: Ph.D./2018/323/TAM, Ph.D. Scholar (Part – Time), PG & Research Department of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Thiruvannamalai – 606 603. Affiliated in Thiruvalluvar University, Serkkadu, Vellore – 632115.

[2]Reesearch Supervisor, Associate Professor, Department Of Tamil, Kalaignar Karunanidhi Government Arts College, Tiruvannamalai – 606603.

*Corresponding Author: gurumoorthiguru10@gmail.com.

**Article Info**
Received on 15-May-2026, Revised on 18-May 2026, Accepted on 20-May-2026, Published on 27-May-2026

## ABSTRACT

N. Muthukumar (Nagarajan Muthukumar) (July 12, 1975 – August 14, 2016) was a multifaceted figure in the Tamil creative sphere, working as a poet, writer, and film lyricist. He penned lyrics for hundreds of films and founded a publishing house named 'Pattampoochi Pathippagam'. He received numerous accolades, including the National Film Award for Best Lyricist, for his work. Muthukumar developed a passion for literature by reading books from his father's collection and gained insight into the nuances of poetry by reading literary magazines. He began writing poetry during his school years and published a collection titled ‘Thoosigal’ at the age of sixteen. He worked as an associate director on the television series ‘Paramapatham’, directed by Venkatesh Chakravarthy, and served as an assistant director to Balu Mahendra for four years. He also wrote dialogues for films such as *Kireedam* and *Vaaranam Aayiram*. Muthukumar learned the intricacies of writing film lyrics from the poet Arivumathi. He made his debut as a lyricist with the song "Muthumuttha Poothirukkum Mullaippoovai Pudichirukku" in the film ‘Veera Nadai’, directed by Seeman. Having started his career in this manner, he went on to write lyrics for numerous films; this article examines the social themes present in his work.

**Keywords**; *Na. Muthukumar, Society in Cinema Lyrics, Society in Contemporary Literature, Society in Media.*

***Keywords**: Silappatikaram, Tolkappiyam, Meyppattiyal, Azhugai Meyppadu, Pathos/Tragic Emotion (Avala Suvai), State of Helplessness/Despair (Kaiyaru Nilai), Disgrace (Ilivu), Loss (Izhavu), Weakness (Asaivu), Poverty (Varumai).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license https://creativecommons.org/licenses/by/4.0/).

# நா.முத்துக்குமார் பாடல்களில் சமூகச் சிந்தனைகள்

[1]**அ.கேசவன்,** பதிவு எண்: Ph.D./2018/323/TAM, முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்),
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி,
திருவண்ணாமலை -606 603. திருவள்ளுவர் பல்கலைக்கழக இணைவுபெற்றது.
[2]**முனைவர் ச.வைத்தீஸ்வரன்,**
நெறியாளர், இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை-606 603.

**முன்னுரை**

நா. முத்துக்குமார் (நாகராஜன் முத்துக்குமார்) (ஜூலை 12, 1975 - ஆகஸ்ட் 14, 2016) தமிழ்க் கவிஞர், எழுத்தாளர், திரைப்படப் பாடலாசிரியர் என பலத்துறைகளில் பணியாற்றியவர். நூற்றுக்கணக்கான படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். பட்டாம்பூச்சி பதிப்பகம் என்ற பதிப்பக நிறுவனத்தைத் தொடங்கி நடத்தினார். தனது பாடல்களுக்காக தேசிய விருது, சிறந்த பாடலாசிரியர் விருது உள்படப் பல்வேறு விருதுகள் பெற்றார். நா. முத்துக்குமார், தன் தந்தை நூலகத்தில் சேகரித்து வைத்திருந்த நூல்களை வாசித்து இலக்கிய ஆர்வம் பெற்றார். இலக்கிய இதழ்களை வாசித்து கவிதைகளின் நுட்பங்களை அறிந்தார். பள்ளியில் படிக்கும்போதே கவிதைகள் எழுதினார். அவற்றைத் தொகுத்து தனது 16-ம் வயதில், 'தூசிகள்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். இயக்குநர் வெங்கடேஷ் சக்கரவர்த்தியின் இயக்கத்தில் உருவான 'பரமபதம்' என்னும் தொலைக்காட்சித் தொடரில் நா. முத்துக்குமார் துணை இயக்குநராகப் பணியாற்றினார். இயக்குநர் பாலுமகேந்திராவிடம் நான்கு ஆண்டுகள் உதவி இயக்குநராகப் பணியாற்றினார். 'கிரீடம்', 'வாரணம் ஆயிரம்' போன்ற படங்களுக்கு வசனம் எழுதினார். நா. முத்துக்குமார், கவிஞர் அறிவுமதி மூலம் திரைப்பாடல் எழுதும் நுணுக்கங்களைக் கற்றார். இயக்குநர் சீமான் இயக்கிய 'வீர நடை' படத்தில், 'முத்துமுத்தா பூத்திருக்கும் முல்லைப்பூவை புடிச்சிருக்கு' என்னும் தனது முதல் பாடலை எழுதி, திரைப்பாடலாசிரியராக அறிமுகமானார். இப்படியாக தொடங்கி பல படங்களுக்கு பாடலை இயற்றியுள்ளார். இவற்றில் சமூகச் சிந்தனைகளை ஆய்வது இக்கட்டுரை ஆகும்.

**திறவுசொற்கள்**

நா.முத்துக்குமார் – திரையிசைப்பாடல்களில் சமூகம் – இக்கால இலக்கியத்தில் சமூகம் – ஊடகத்தில் சமூகம்.

**நல்லோர் உள்ளம்**

இறைவன் உறையும் இடம் நல்லோரின் உள்ளம் என்று குறிப்பிடுகின்றார். நல்லோரின் தூய்மையான உள்ளத்தில் இறைவன் தங்கியிருக்க விரும்புவான் என்று நா.முத்துக்குமார் குறிப்பிடுகையில்,

**“ஆலயம் என்பது**
**கோபுர வாசலும் சிலையும்**
**மட்டும்தான்**
**அதைவிட மேல்**
**ஏது ஆண்டவர் வாழும்**
**நல்லோர் உள்ளம்தான்.”**[33]

என்று பாடுகிறார். தெய்வத் திருமகள் என்னும் திரைப்படத்தில் வரும் பாடலில், ஆலயம் என்பது கோபுர வாசலும் சிலையும் மட்டும்தான் என்றும், உண்மையில் இறைவன் வாழும் இடம் நல்லோரின் உள்ளத்தில் என்று பாடுகிறார். திருமந்திரத்தில் வரும் “உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்” என்னும் கருத்தை அடியொற்றி இப்பாடல் எழுதப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. மேலும்,

**“தெய்வம் வாழ்வது எங்கே**
**தெய்வம் வாழ்வது எங்கே**
**தவறுகளை உணரும்**
**மனிதன் நெஞ்சத்தல்”**[1]

என்று பாடுகின்றார். தான் செய்த தவறுகளை உணர்ந்து வருந்துவோரின் உள்ளத்திலும் கடவுள் இருக்கின்றான் என்று “வானம்” என்னும் திரைப்படத்தில் தோன்று பாடலில் குறிப்பிடுகின்றார்.

**பிறப்பின் நோக்கம்**

உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் பிறப்பும், இறப்பும் இயல்பாக நிகழுக்கூடியதாகும். மற்ற உயிர்கள் ஒரே மாதிரியான சுழற்சியில் வாழ்ந்து மடிந்துவிடுகின்றன. மனிதர்கள் பலரும் மற்ற உயிர்களைப் போலவே வாழ்ந்து முடிகிறார்கள். ஆனால், தான் ஏதேனும் ஒரு குறிக்கோளை வைத்துக் கொண்டு, அதை அடைவதற்கு முயற்சியெடுக்க வேண்டும் என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறார். வானம் திரைப்படப் பாடலில்,

**“பிறப்பதும் இறப்பதும்**
**புழுவுக்கும் நடக்குமே**
**சாதனை செய்துவிட நினைக்கிறேன்**
**தினசரி கவலைகள்**
**தினம் தினம் துரத்திட**
**அத்தனையும் எனக்குள்ளே புதைக்கிறேன்.”**[2]

என்று பாடுகிறார். பிறப்பும் இறப்பும் புழுவுக்குக்கூட நிகழ்கின்றது. ஆனால், மனிதர்களுக்கு அவ்வாறு நிகழுந்தால் அது இழிவு என்கிறார். ஏதேனும் ஒன்றை இலக்காகக் கொண்டு சாதிக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார் நா.முத்துக்குமார்.

**சமூக ஒற்றுமை**

உலகில் உள்ள மக்கள் அனைவரும் மொழியாலும், நிறத்தாலும், இனத்தாலும், மதத்தாலும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்து உள்ளனர். அவ்வாறு சமூகத்தில் காணப்படும் பிரிவினைகளைக் கடந்து மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டிய சமூகக் கடமையாக உள்ளது. மக்கள் ஒற்றுமையோடு வாழ வேண்டும் என்ற கருத்தை,

**"மனிதர்கள் நிறம் மாறி**
**மொழி மாறி வாழ்ந்தாலும்**
**நம் மனதில் அன்போடு**
**வாழ்கின்ற நிலைபோதுமே"**[3]

என்று பாடுகின்றார். மனிதர்கள் நிறத்தாலும், மொழியாலும் வேறுபட்டு இருந்தாலும் மனதால் அன்பு செலுத்தி ஒன்றுபட்டு வாழ்கின்ற நிலை போதும் என்று பாடியுள்ளார் கவிஞர்.

**மக்கள் வாழ்க்கை**

மக்கள் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிக்கொண்டே இருக்கக் கூடியவனவாகும். இரணடையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்கும் நமக்கு அவசியம் இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார் கவிஞர்.

**"வளையாமல் நதிகள் இல்லை**
**வலிக்காமல் வாழ்க்கை இல்லை**
**மூங்கிலின் காயம் குழல் ஆகும்."**[4]

என்று பாடுகிறார். பெருக்கெடுத்து ஓடும் நதிகள் கூட வழிகளை உருவாக்கும் போது வளைந்து செல்லும், அதைப் போல வாழ்க்கையில் துன்பங்கள் வரும் போது நாமும் வளைந்து கொடுக்க வேண்டும் என்கிறார். மேலும், மூங்கிலில் துளையிடுவதாலயே அது இசையைத் தரக்கூடியதாக மாறுகின்றது. அதைக் காயம் என்று கருததாது ஏற்பதாலேயே புல்லாங்குழலாக மாறுகின்றது. அது போல நாமும் துன்பங்களைக் கண்டு கவலைப் படாமல் அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவநிலையை அடைய வேண்டும் என்னும் கருத்தை கவிஞர் குறிப்பிடுகின்றார்.

**சமூகக் கட்டுப்பாடுகளைச் சாடுதல்**

கட்டுப்பாடுகள் என்ற போர்வையில் சமூகத்தில் எண்ணற்ற அவலங்கள காலந்தோறும் நடந்து வருகின்றன. அவற்றை வெறுத்து ஒதுக்கி புறம்தள்ள வேண்டும் என்பது கவிஞரின் கருத்தாக அமைகின்றது. அக்கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து வெளியே வருவதே, விலங்கிட்டு இருக்கும் மனதிற்கு மருந்து என்று குறிப்பிடுகிறார்.

**"கூட்டத்த தாண்டி**
**வெளியில வா**
**வாழ்க்கையை ரசிக்க தெருவுக்கு வா**

**முட்ட உடைஞ்சா கோழி பொறக்கும்**
**கட்டுப்பாடு உடைஞ்சா தான்**
**இன்பம் பொறக்கும்**
**பூட்டுப் போட்ட மனசுக்கு**
**என்னக் கிடைக்கும்.”[5]**

என்கிறார். கட்டுப்பாடுகள் ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கே அதிகம் சமூகத்தில் காணப்படுகின்றன. அத்தகைய கட்டுப்பாடுகளைத் தகர்த்து கொண்டு பெண்கள் முன்னேறி வரவேண்டும் என்னும் அடிப்படையில் இப்பாடலை எழுதியுள்ளார் கவிஞர்.

**மனிதனின் பேராசை**

மனிதனின் பேராசையால்தான் இவ்வுலகம் எவ்வளவோ அழிவுகளைச் சந்தித்துள்ளது, சந்தித்தும் வந்து கொண்டிருக்கிறது. மனிதர்கள் சுயநலமாக எல்லாம் தனக்கு என்று கருத தொடங்கியதில் இருந்து எண்ணற்ற இழப்புகள் ஏற்படத் தொடங்கின. இந்த உலகம் அனைத்து உயிர்களுக்குமானது என்னும் சிந்தனையறிவை எப்பொழுது இந்த மனித சமுதாயம் முழுவதுமாக உணர்கிறதோ, அப்பொழுதுதான் இந்த உலகம் வளமானதாக மலரும். இந்தக் கருத்தைத் தம்முடைய பாடலில்,

**“பறவைக்கும் எறும்புக்கும் கூட**
**வீடு உண்டு**
**அது வாடகை தந்ததுண்டா**
**அது பார்க்கும் இடங்களெல்லாம்**
**தனக்கு என்று**
**தனி வேலிகள் போட்டதுண்டா**
**ஆறறிவு மனிதன் ஏன்**
**அலைகிறான் தவிக்கிறான்**
**அத்தனையும் தனக்கென்றே**
**உலகில் நினைக்கிறான்**
**இறுதியில் இறந்து போகையில்**
**இடுகாட்டில் இடம் இல்லாமல**
**சாம்பலாகிறான்.”[6]**

என்கிறார். பறவைகளும், எறும்புகளும் தங்களுக்கென்று வீடு கொண்டுள்ளன. ஆனால், அவைகள் வீட்டிற்கு வாடகை வாங்குவதில்லை என்றும், பார்க்கும் இடங்களெல்லாம் தங்களுடையது என்று வேலியிட்டுத் தடுப்பதில்லை என்றும், ஆறறிவு கொண்ட மனிதர்களாகிய நாம் அலைகிறோம், அத்தனையும் தனதாக்கிக் கொள்ளத் துடிக்கிறோம் என்றும், இறுதியில் இறந்துபோகிறோம். இடுகாட்டிலும் இடமின்றிச் சாம்பலாகிப் போகிறோம் என்ற சமூக அவலத்தைப் பதிவுசெய்கிறதார். எதுவும் நிலையில்லை என்று

தெரிந்திருந்து அதற்காக அலைந்து திரியும் மனிதனின் செயலை இடித்துரைக்கும் வகையில் இப்பாடலானது அமைந்துள்ளது.

**தீய ஒழுக்கம்**

மக்கள் வாழ்வதற்கு எத்தனையோ நல்ல வழிகள் இருந்தபோதிலும், தீய வழியில் சென்று தனக்கும் பிறர்க்கும் பல இன்னல்களை விளைவிக்கின்றனர். அவ்வாறு வாழ்ந்து பாவங்களைச் சுமக்கின்றனர் என்று கவிஞர் குறிப்பிடுகின்றார்.

**"பாவங்களைச் சேர்த்துக் கொண்டு**
**எங்கே செல்கிறோம்**
**நாம் வாழ்ந்த வாழ்க்கை புரியமாமல்**
**மண்ணுக்குள் செல்லுகிறோம்**
**நஞ்சினைப் போல**
**நெஞ்சிற்குள் இருக்கும்**
**குற்றம் கொல்கிறதே**
**உறுத்தும் முள் ஏதோ சொல்கிறதே**
**நீ இருக்கும் இடந்தான்**
**எது அல்லா…**
**அது மன்னிக்கும் மனமே."[7]**

என்று பாடுகிறார். பாவச் செயல்களைச் செய்வதால் மண்ணிற்குள்தான் இறுதியாகச் செல்லப் போகிறோம் என்று குறிப்பிடுகிறார். செய்த குற்றமும் நஞ்சைப்போல நெஞ்சைக் கொல்லும் தன்மை உடையது என்று குறிப்பிடுகிறார்.

**வாழ்க்கையை வாழும் விதம்**

ஒவ்வொருவருக்கும் தங்கள் வாழ்க்கையைப் பற்றிய கனவுகள் இருக்கும். அக்கனவுகள்படி வாழ்க்கையானது அமையாத பொழுது, அவ்வாழ்க்கையில் வெறுப்புணர்வு தோன்றுகின்றது. அவ்வாறு இல்லாமல் நமக்குக் கிடைத்த வாழ்க்கையை மகிழ்ச்சியாக அமைந்து கொள்வது நம் கையில்தான் உள்ளதென்று குறிப்பிடுகிறார் நா.முத்துக்குமார்.

**"புல் நுனி மீதே**
**தூங்கிடும் பனியை ரசித்தால்**
**மின்னலின் ஒளியின் மீது கொண்ட**
**மயக்கம் விலகிடும்**
**கிடைத்ததை எண்ணி வாழ்ந்திடும்**
**வாழ்வை ரசித்தால்**
**ஜன்னலின் கதவைத் தீண்டி**
**புதிய வெளிச்சம் வீசிடுமே ஏ..**

**………………………………**

**ஆசைக்குத்தான்**
**அளவுகள் இல்லையே**

**அதைத் தொடர்ந்தால்**
**வாழ்க்கை தொல்லையே."[8]**

என்கிறார். கிடைத்த வாழ்க்கை மனமுவந்து வாழத் தொடங்கினால் அது மகிழ்ச்சியான வாழ்க்கையாக அமையுமெனக் குறிப்பிடுகிறார். வாழ்க்கையில் ஆசைகள் அதிகம் கொண்டிருப்பதால் துன்பங்கள் வந்து சேருகின்றன. அதனால் ஆசைகள் நிறைவேறாமல் போயினும், இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழ வேண்டும் என்ற வாழ்வின் உயர்ந்த கருத்தை இப்பாடலில் முன் வைக்கிறார் கவிஞர்.

**மூன்றாம் பாலினம் – சமூகத்தின் பார்வை**

சங்ககாலம் தொட்டு இக்காலம் வரையில் இலக்கியங்களில் மூன்றாம் பாலினத்தவர்கள் குறித்த செய்திகள் பதிவாகியுள்ளன. தொல்காப்பினார் மூன்றாம் பாலினத்தார் பற்றிக் குறிப்பிடுகையில்,

**"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்**
**ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்**
**தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்**
**இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே**
**இருதிணை மருங்கின் பால் பிரிந்திசைக்கும்"[9]**

என்று குறிப்பிடுகிறார். ஆண், பெண் என்னும் இரண்டு திணைகளிலும் வேறுபட்டு இருப்பவர்கள் மூன்றாம் பாலினத்தவர் என்பதை "இருதிணை மருங்கின் பால் பிரிந்திசைக்கும்" என்று குறிப்பிடுகிறார்.

நன்னுலூர் மூன்றாம் பாலினத்தவருக்கு இலக்கணம் வகுக்கையில் பேடு, அலி என்னும் சொற்களில் குறிப்பிடுகிறார். மேலும், அவர்களை அஃறிணையாகவும் குறிப்பிடுகிறார்.

**"பெண்மை விட்டு ஆண் அவாவுவ பேடு ஆண்பால்**
**ஆண்மை விட்டு அல்லது அவாவுவ பெண்பால்**
**இருமையும் அஃறிணை அன்னவும் ஆகும்."[10]**

என்று இலக்கணம் வகுக்கிறார் நன்னூலார். மூன்றாம் பாலினத்தாரை அஃறிணையாகக் குறிப்பிடும் நன்னூலாரின் கூற்று விந்தையாக உள்ளது. ஆறறறிவுடைய அவர்களை எவ்வாறு அஃறிணையாகக் கருத முடியும் என்ற கேள்வியும் எழுகிறது.

மூன்றாம் பாலித்தார் சமூத்தினரால் எவ்வாறு பார்க்கப்பபடுகிறார்கள் என்று நா.முத்துக்குமார் அவர்கள்,

**"தங்கம் வைரம் செல்லமென**
**பெற்றத்தாய் அழைத்திருப்பாள்**
**அங்கம் மாறி வளர்ந்தவுடன்**
**அவளேக்கூட வெறுத்திருப்பாள்**
**நதியில் இறகாய் மிதக்கும் வழி**

**கரையில் இருந்தால் தெரியாது**
**உடலை வெறுத்து சுமக்கும் வலி**
**உலகில் யாருக்கும் புரியாது."[11]**

என்கிறார். ஒரு குழந்தை மண்ணில் பிறக்கும்போது, அக்குழந்தையைப் பெற்றவள் தங்கம், வைரம், செல்லம் என்று பலவாறாய் அழைத்திருப்பாள். அதே குழந்தை வளர்ந்ததன் பின்னர், மூன்றாம் பாலினம் என்று அடையாளம் பெற்றுவிட்டால் தாயும் அக்குழந்தையை வெறுக்கிறாள். இவ்வாறு உடலால் வெறுக்கப்படும் மூன்றாம் பாலினத்தாரின் நிலையைப் பற்றிக் குறிப்பிடுகிறார். இச்சமூகம் திருநங்கைகள் மீது கொண்டுள்ள கருத்துகள் எதிர்மறையாக இருப்பதால், அப்பிள்ளைத் தாயாலும் வெறுக்கப்படும் அவலம் நிகழ்கின்றது. இதைச் சாடுவதாக அமைகிறது நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்.

**சமூகத்தைக் காக்கும் பணி**

அன்றை நாளில் அரனின் கட்டளையை ஏற்று மறவர்கள் காவல் பணியை மேற்கொண்டனர். இன்றைய நாளில் அரசின் உத்தரவின் பேரின் காவலர்கள் தங்கள் காவல் பணியை மேற்கொள்கின்றனர். நாட்டிற்குள் காவலர்களும், நாட்டின் எல்லையில் இராணுவத்தினரும் காவல் தொழிலை மேற்கொள்கின்றனர். காவலர் பணியை மேற்கொள்ளும் ஒருவர் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்களைக் கண்டிக்கும் வகையில் நா.முத்துக்குமார் பாடல் எழுதுகிறார்.

**"கள்ள நோட்டுங்க அடிக்கிறவன்**
**கந்து வட்டி வாங்கி சுரண்டுறவன்**
**கோழி திருடுறவன்**
**ஆட்டை அமுக்குறவன்**
**ஆறு மாச டைமுக்குள்ள திருந்திடுங்க.**
**வைப்பாட்டி வச்சா அடிப்பேங்க**
**பெத்தவள திட்டுனா மிதிப்பேங்க**
**ஆக்கரு குத்துற**
**பொம்புரத்தை போல**
**தப்பு நீயும் செஞ்சா**
**தலையில குட்டுவான்**
**குட்டு பட்ட நீயும்**
**குத்தம் உணர்ந்து புட்டா**
**சத்தியமா எனக்கு**
**வேறொன்னும் வேணாண்டா."[12]**

என்று பாடுகின்றார். குற்றங்களில் ஈடுபடுவோர்கள் தாங்களாகவே திருந்திவிடுங்கள் என்று காவலர் பணியை மேற்கொள்ளுபவர் கண்டிப்பதாக இப்பாடல் அமைகின்றது.

**சமூகத்தில் போலிகள்**

மக்கள் காலப்போக்கில் ஏமாற்றங்களுக்குப் பழகிக் கொண்டுள்ளனர். தங்களை மற்றொருவர் ஏமாற்றுவதை அறிந்தும், அதைக் கடந்துச் செல்வதற்குத் தயாராகிவிட்டனர். போலியானவர்களுக்கும், மற்றவர்களை ஏமாற்றுபவர்களுக்கும் இச்சமூகம் தலை வணங்குகின்றது. தனக்கு ஏதும் தெரியாத பொழுதும், தங்களுக்கு எல்லாம் தெரிந்திருப்பதாக வெளிக்காட்டிக் கொள்ளும் போலியான மனிதர்கள் எங்கும் புரையோடியுள்ளனர். போலியான கலைஞர்களைப் பற்றி நா.முத்துக்குமார் அவர்கள்,

**"பாட்டுக் கட்டி மெட்டு சொல்வார்**
**தன்னை தானே தட்டிக் கொள்வார்**
**கத்தும் குயில் வித்தைகொரு**
**அர்த்தம் சொல்ல யாருண்டு**
**தேவையில்லாத ஓசைகள் எழுப்பி**
**இசையினை கொடுப்பானே**
**பொருள் இல்லாத வார்த்தைகள் எழுதி**
**பாட்டு என்று சொல்வான்."[13]**

என்று பாடுகின்றார். போலியான கலைஞர்கள் பாட்டுக்கட்டி மெட்டு சொல்லி, தன்னைத் தானே பெருமையாகப் பேசி கொள்வார்கள். தேவையில்லாத ஓசைகள் எழுப்பி இசையமைப்பார்கள். பொருள் இல்லாத வார்த்தைகளை எழுதி அதைப் பாட்டு என்று சொல்லவார்கள். இத்தகைய போலியான கலைஞர்கள் உலகெங்கும் புரையோடியுள்ளனர் என்று பாடுகின்றார்.

**போதையில் உழலும் சமூகம்**

மக்கள் எண்ணற்ற போதையில் மாட்டிக் கொண்டு தவிக்கின்றனர். அது மது போதையாகவும், புகழ் போதையாகவும் விளங்குகின்றது. சங்க காலத்தில் கள்ளுண்ணுதல் கண்டிக்கப்படவிலலை. மக்கள் கள்ளுண்டு களித்திருந்த நிகழ்வை இலக்கண – இலக்கியங்கள் "உண்டாட்டு" என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றன. கள்ளுண்ணாமை என்னு அதிகாரத்தில் வள்ளுவர்,

**"உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்**
**எண்ணப்பட வேண்டா தவர்."[14]**

என்கிறார். அறிவை மயக்கும் கள்ளை பெரியவர்கள் உண்பதைத் தவிர்த்துவிடுவர். அக்கள்ளை உண்பவர்கள் சான்றோர்கள் எண்ணத் தகுந்தவர்களாக இல்லாது போகிறார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். மதியை மயக்கும் கள் தன்னுடைய இயல்பில் இருந்து ஒருவரை வேறுபடுத்துகிறது. அதனால் இழிவான செயல்களை மேற்கொள்ள தோன்றுகிறது என்பதை அறிந்த சான்றோர்கள் கள்ளை வெறுத்து ஒதுக்கி விடுகின்றனர்.

இக்காலத்தில் கள்ளை விடவும் மோசமான போதை பொருட்கள் சந்தையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் கிடைக்கின்றன. அத்தகைய போதையில் மக்கள் சிக்கிக் கொண்டு தவிக்கும் நிலையை நாள்தோறும் வெளிவரும் செய்திகளின் வழியே அறியமுடிகின்றன. நா.முத்துக்குமார் தம்முடைய பாடலில்,

**“ஜெயிச்சிட்டா புகழ் போதையில் ஆடுறானே**
**தோத்துட்டா சரக்கு போட்டு ஆடுறானே”**[15]

என்கின்றார். ஆனால், கொண்டாட்ங்களிலும், துன்ப நிகழ்வுகளிலும் ஒரு விருந்தாக போதை கலாச்சாரம் உருவாகியுள்ளதைக் காண்முடிகின்றது. மேலும்,

**“போட்டது பத்தல மாப்பிள்ளை**
**இன்னொரு கோட்டர் சொல்லுடா**
**அப்படியே மேட்டர கேளுடா**
**வேணாம் மச்சான் சோறு**
**நீ சொல்லு இரண்டு பீரு**
**அட குப்பைத்தொட்டி கூடு**
**நமக்குப் பஞ்சி மெத்தடா**
**ஹெ குடிகாரன் பேச்சு**
**அது விடிஞ்சிபுட்டா போச்சு**
**அட செஞ்ச தப்ப மறந்து**
**போகும் தெய்வம் நாங்கடா**
**நம்ம கவலை எல்லாம் விரட்ட**
**நீ மனசு விட்டு பேசு**
**நீ பேசலனா போட்டதெல்லாம்**
**லூஸ் தானடா”**[16]

என்று பாடல் எழுதியுள்ளார் முத்துக்குமார். மதுக்கு அடிமையாகிவன் பாடும் பாடலாக உள்ளது இப்பாடல். குடிகாரர்களுக்குக் குப்பைத்தொட்டி பஞ்சி மெத்தையாக இருப்பதாகவும், குடிகாரர்கள் போதையில் பேசுவது எதையும் நினைவில் நிறுத்தாதவர்கள் என்றும் பாடுகிறார். இச்சமூகம் மதுவின பிடியில் சிக்குண்டு எப்படியெல்லாம் சீரழிந்துள்ளது என்பதை எடுத்துரைக்கும் வகையில் அமைந்துள்ளது இப்பாடல்

**தமிழரின் இன்றைய நிலை**

காலந்தோறும் தமிழ் நிலத்தில் பிறமொழி பேசுநர்கள் வந்து சென்றுள்ளனர். அவ்வாறு நிகழ்கையில பிறமொழிகளின் தாக்கம் தமிழர் நிலத்தில் உருவாகியுள்ளன. பிறமொழி பேசும் மக்கள் தமிழரின் நிலத்தில் குடியேறுவதால் இங்குள்ள தமிழர்களின் வாழ்க்கை எவ்வாறு உள்ளதென்பதைப் பற்றிக் குறிப்பிடுகையில்,

**“இந்தி பேசுறான் இங்கிலீசு பேசுறான்**
**இது வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாடு**
**தமிழ்ப் பேசுறவன் ஏந்துறானே திருவோடுங்கயம்மா.”**[17]

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/tirjts05sp052026

என்று பாடுகிறார். இந்தியைப் பேசும் மக்களும், ஆங்கிலம் பேசும் மக்களும் இந்த மண்ணில் வந்து வளமாக வாழ்கின்றனர். ஆனால், தமிழ் மொழியைப் பேசும் மக்கள் இங்கு வறுமையில் வாடுகின்றனர் என்று குறிப்பிடுகின்றார்.

**பெண்களின் நிலை**

அக்காலத்தில் பெண்களுக்கு எண்ணற்றக் கட்டுபாடுகள் இருந்தன. கல்வி உரிமை, சொத்துரிமை, பேச்சுரிமை, வாக்குரிமை உள்ளிட்ட எண்ணற்ற உரிமைகள் மறுக்கப்பட்டிருந்தன. பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையாக எல்லா உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்க வேண்டும் என்று பெண்ணிய இயக்கங்கள் உலகெங்கும் தோன்றி வளர்ந்தன. அவ்வியக்கங்கள் பெண்களுக்கு இருககக் கூடிய சிக்கல்களையும், அச்சிக்கல்களை நீக்குவதற்கான வழிமுறைகளையும் ஆராய்ந்தன. இவ்வாறு உருவாகிய பெண்ணிய இயக்கங்களிலும் தொடக்கக் காலத்தில் ஆண்களின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. பின்னாளில், பெண்ணிய இயக்கங்களுக்குப் பெண்களே தலைமை வகிக்கத் தொடங்கினர். உலகெங்கும் பெண்ணியச் சிந்தனைகள் மலரத் தொடங்கின. பெண்களுக்கு கல்வியில் இருந்து அனைத்து உரிமைகளும் ஆண்களுக்கு இணையாக இன்று சட்ட ரீதியாகவே கிடைத்துள்ளன. ஆனால் இன்றளவும் பெண்கள் அடிமைகளாக நடத்தப்படும் அவலம் சமுதாயத்தில் எங்கும் புரையோடியுள்ளன.

**சமூக சீரழிவுகள்**

பழங்காலத்து மக்கள் தங்கள் வாழ்க்கை ஒழுக்கமாக வாழ எண்ணினர். அதற்காகவே தாங்கள் வாழும் நிலத்திற்குப் பெயர்களை வழங்கினர். மலை, காடு, வயல், கடற்கரையெனத் தங்கள் வாழிடங்களை அமைத்துக் கொண்டு அதற்கு மலர்களின் பெயர்களைச் சூட்டினர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப் பெரிட்டு அதோடு திணை என்னும் பின்னொட்டை வழங்கினர். திணை என்பதற்கு ஒழுக்கம் என்று பொருள். தாங்கள் வாழும் நிலத்தில் ஒழுக்க நெறிகளில் இருந்து பிறழாது வாழ வேண்டும் என்னும் சிந்தனைகளை உடையவர்களாக விளங்கியிருந்தனர் என்பதை இதன் வழி அறியமுடிகின்றது. ஆனால், இக்காலத்தில் மக்கள் அழிவின் பாதைக்குச் செல்வதற்கு எண்ணற்ற வழிகள் உருவாகியுள்ளன.

> **“நல்லத் தண்ணித் தீவுக்குள்ள**
> **கெட்டத் தண்ணி அடிப்பவன்டா**
> **……………………………………**
> **ராத்திரியில முழிப்போம்**
> **காலையில படுப்போம்**
> **நல்லவன கெடுப்போம்**
> **நாங்க நாலு பேர மிதிப்போம்**

**………………………………**
**கேட்டு பூட்டி இருந்தா**
**ஓட்டப் பிரிச்சி குதிப்போம்."18**

என்று பாடலெழுதுகிறார். மது அருந்துவதைப் பற்றியும், நல்ல மனிதர்களையும் சீரழியும் பாதைக்கு அழைத்துச் செல்வதைப் பற்றியும் இப்பாடலில் குறிப்பிடுகின்றார். சமுதாயத்தில் அத்தகைய மனிதர்கள் இருப்பதைத் தம் பாடலின் வழியாக வெளிப்படுத்துகிறார் கவிஞர். மேலும் இளைஞர்கள் எவ்வாறெல்லாம் சமூகத்திற்கும், தனக்கும் கெடுதல்களைச் செய்கின்றனர் என்பதை,

**"டீக்கடையில தம் அடிச்சி**
**பொகையை விட்டுவிட்டு பிடிப்போம்**
**தியேட்டருல விசிலடிச்சு**
**நல்ல சீட்டுகளை கிழிப்போம்**
**ஆத்துக்குள்ள குதிப்போம்**
**பொண்ண டாவு அடிப்போம்**
**கொத்த வரும் பாம்ப கூட**
**கால வச்சு மிதிப்போம்"19**

என்று எழுதுகிறார். இளைஞர்கள் போதை பொருட்களுக்கு அடிமையாகி இருப்பதையும், சமூகத்தால் வெறுத்து ஒதுக்கப்படும் செயல்களில் ஈடுபடுவதாகவும் பாடலில் பதிவுசெய்கிறார்.

**முடிவுரை**

மக்கள் ஒன்றாகக் கூடி வாழும் தொகுதியே சமூகம் அல்லது சமுதாயம் என்று வழங்குகின்றோம். சமுதாயம் என்பதற்குரிய அறிஞர்களின் விளக்கங்களையும், நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்களில் பாதிவாகியுள்ள சமுதாயம் சார்ந்த சிந்தனைகளை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன. இன்றைய சமுதாயத்தில் மக்கள் எவ்வகையான பண்புநலன்களை உடையவர்களாக உள்ளனர் என்றும், மக்கள் வாழ்வில் காணப்படும் மேன்மைகள் மற்றும் கீழ்மைகள் பற்றியும், சமுதாயத்தல் பெண்கள் எவ்வாறு மதிக்கப்படுகின்றனர் என்றும், பொருள்மீது நாட்டம் கொண்டுள்ள மக்கள் இச்சமூகத்தல் எவ்வாறெல்லாம் வாழ்கிறார்கள் என்றும், திரைப்பட மோகம், தந்தை மகன் உறவு, ஒழுக்க நெறியில் பிறழ்தல், பேராசை என இச்சமூக நிகழ்வுகள் பலவற்றை இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளன.

**சான்றெண் விளக்கம்**

[1]..1தொகுதி-8, தெய்வத் திருமகள், ஜகடதோம் ஜகடதோம்.

[2]..2மேலது,1,2,3,4, WHO AM I

[3]. தொகுதி-9, புதுக்கோட்டையிலிருந்து சரவணன், புதுக்கோட்டை சரவணா.

[4]. மேலது

[5]. தொகுதி-1, நான் சிகப்பு மனிதன், லவ்லி லேடிஸ்.

[6]. தொகுதி-7,கடிகார மனிதர்கள், ஏனோ ஒரு வீடு வாசல்.

[7]. தொகுதி-7, தரமணி, பாவங்களைச் சேர்த்துக்கொண்டு.

[8]. தொகுதி-8, காக்கா முட்டை, எதை நினைத்தோம் அதை அடைந்தோம்.

[9]. தொல்-சொல், கிளவி,நூ.4

[10]. நன்னூல்,சொல்,நூ.264

[11]. தொகுதி-8, நர்த்தகிரி, ஜெய் ஜெய் மாதா.

[12]. தொகுதி-9,சாமி, வேப்பமரம் புளியமரம்.

[13]. தொகுதி-9, மனசெல்லாம், சின்னக் குயிலே குயிலே.

[14]. திருக்குறள்,எ.922

[15]. தொகுதி-2, சகுனி, கந்தா காரவடை.

[16]. மேலது.போட்டது பத்தல.

[17]. மேலது.கந்தா காரவடை.

[18]. தொகுதி-8, தாமிர பரணி, அவள் வள்ளியா.

[19]. தொகுதி-8, அவள் பெயர் தமிழரசி, பாளைங்கோட்டை படபடக்க.